விலை சதம் 25. தொலைபேசி 23411

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, சித்திரை 4உ (17-4-71) சனி ஸபர் பிறை 20 புத்தகம் 25 இதழ் 22

'மப்பு மந்தாரம் உடைய நாள் மோசமான நாளன்று. மேலாம் செயலில் ஈடுபடாது கழிந்த நாளே மோசமானது.'

—தர்மசக்கரம்

காலம் பெறுமதியானது: காலத்தை வீணுக்காதீர்கள் மில்க் வைற் சலவைப்பவுடர் வாங்கிப் பாவித்து நேரத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்துங்கள். பாவித்த உறைகளை அனுப்பி மிக உயரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப் தொழிற்சாலை,
த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.

# 'வங்காளதேச' அரசை அங்கீகரியுங்கள்!

கிழக்கு பாகிஸ்தானில் அமைக்கப்பட்டிருக்கும் ஷேக் முஜிபுர் ரகுமான் தலைமையிலான 'வங்காள தேச' அரசாங்கத்தை கிழக்கு பாகிஸ்தானின் சட்டபூர்வமான அரசாக இலங்கையும் அங்கீகரிக்கவேண்டுமென இலங்கை அரசாங்கத்திடம் இலங்கைத் தமிழரசுக் கட்சி வலியுறுத்த இருக்கிறது.

வங்காள தேசத்தில்தாம் அமைத்துள்ள அரசை வங்காள தேசத்தின் சட்டபூர்வமான அரசாக அங்கீகரிக்கும்படி கோரி அவாமிலீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரகுமான் ஜனநாயக நாடுகளுக்கெல்லாம் வேண்டுகோள் விடுத்துள்ளது தெரிந்ததே. ஷேக் முஜிபுர் தலைமையிலான வங்காள அரசை இந்திய அரசு அங்கீகரிக்கவேண்டுமென்று கோரி இந்தியா முழுவதும் குரல் எழுப்பப்பட்டு வருகிறது.

இந்திய மத்திய அரசு ஷேக் முஜிபுர் தலைமையிலான வங்காள அரசை கிழக்கு பாகிஸ்தானின் சட்டபூர்வ அரசாக ஏற்று அங்கீகரிக்கவேண்டுமென தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்கு பாகிஸ்தான் இராணுவத்திற்கு இலங்கை அரசு

## இலங்கை அரசிடம் தமிழரசார் கோருவர்

அளித்துவரும் உதவிகளை நிறுத்தும்படி கோரி ஐ. நா.வில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு முன்பாக கிழக்கு பாகிஸ்தானியர்களும் அவர்களது ஆதரவாளர்களும் இவ்வாரம் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களில் சில குழந்தைகள் 'வங்காளத்தில் உள்ள எங்களைப் போன்ற குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்' என்று கூறும் அட்டைகளை கைகளில் பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

மேற்கு பாகிஸ்தானிலிருந்து கிழக்கு பாகிஸ்தான் செல்லும் விமானங்கள் எரிபொருள் போட்டுக்கொள்வதற்காக இலங்கை விமான நிலையத்தை பயன்படுத்துவதை அவர்கள் பலமாக ஆட்சேபித்தார்கள்.

இலங்கைத் தூதரிடம் ஆட்சேப குறிப்பு ஒன்றையும் அவர்கள் கொடுத்தார்கள்.

## பத்திரிகைத் தணிக்கை

பத்திரிகைத் தணிக்கை அமுலில் இருப்பதால், வழமையான அம்சங்கள் சுதந்திரனில் இடம் பெறவில்லை.

அடுத்த கிழமை வழமையான அம்சங்களுடன் சுதந்திரன் வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆர்.

## வாசகர்களுக்கு

தவிர்க்கமுடியாத காரணங்களினால் இவ்விதழ் மட்டும் 4 பக்கங்களுடன் வெளிவருகிறது. நாட்டு நிலைமை சீரடைந்தால் அடுத்த இதழ் வழமைபோல 12 பக்கங்களுடன் வெளிவரும் என்பதை தெரியப்படுத்துகிறோம்.

—நிர்வாகி:
சுதந்திரன்:

# சிங்களப் பரீட்சை எடுக்காவிடின் தமிழ் ஊழியருக்குக் கல்தா!

## புதிய சுற்றறிக்கை தயாராகிறது!

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு புதிய ஆபத்து வருகிறது. இது வரையில் சிங்களப் பரீட்சை ஒன்று கூட எடுக்கத்தவறியவர்கள் அனைவரையும் அரசாங்க சேவையிலிருந்து உடனடியாக நீக்கிவிட அரசாங்க சேவைக்குழுவின் அனுசரணையுடன் அரசு முடிவு செய்துள்ளதாக அறியப்படுகிறது. இதற்கான திறைசேரிச் சுற்றறிகையை அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளரும் பொது நிர்வாக அமைச்சரும் கூட்டாகத் தயாரித்துள்ளனர் என்றும் இச் சுற்றறிக்கை அரசகரும மொழித்திணைக்களத்தில் இப்போது மொழிபெயர்க்கப்பட்டு வருவதாகவும் சுதந்திரனுக்கு தகவல் கிடைத்துள்ளது.

அரசாங்கம் தயாரித்துள்ள புதிய சுற்றறிக்கையில் பின்வரும் அம்சங்கள் இடம் பெற்றுள்ளன என்று அறியப்படுகிறது.

(1) குறிப்பிட்ட சுற்றறிக்கை வெளியிடப்படும் திகதிக்கு முன்பதாக புதிய அரசாங்க ஊழியர்கள் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியடைந்திருந்தால் அவர்கள் சேவையில் உறுதிப்படுத்தப்படுவர். எனினும் அவர்களது சேவை மூப்பு 769ம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைப்படியே கணிக்கப்படும். (அதாவது அவர்களது சேவை மூப்பு நியமனத் திகதியிலிருந்து அல்லாமல் சிங்கள பரீட்சையில் சித்தியடைந்து பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்தே கணிக்கப்படும்.)

(2) சிங்களப் பரீட்சை எடுத்திருந்து—தகுதிகாண் காலமும் முடிவடைந்திருந்து—சிங்களத்தேர்ச்சிப் பரீட்சையில் பரிபூரணமாக சித்தியடையாதிருப்பவர்கள், குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை வெளிவந்து இரண்டு கிழமைகளுக்குள் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அரசாங்க சேவைக்கமிஷனுக்கு அதற்கான காரணத்தைத் தெரியப்படுத்த வேண்டும்.

(3) இது வரையில் சிங்களப்பரீட்சை எதற்கும் தோற்றாமலிருப்பவர்கள் உடனடியாக வேலையிலிருந்து நீக்கப்படுவர்.

இந்த மூன்று முக்கிய அம்சங்களும் புதிய சுற்றறிக்கையில் இடம் பெற்றுள்ளதாக தெரிகிறது.

## மொஹிதீன் நீக்கப்பட்டார்!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இயக்குனர் சபையிலிருந்து ஜனாப் எச். எம். பி. மொஹிதீன் விசேட அரசாங்கவர்த்தமானி உத்தரவொன்றின் மூலம் தகவல் அமைச்சரால் நீக்கப்பட்டுள்ளார். அவருடன் இருவா

(3-ம் பக்கம் பார்க்க)

## சித்திரைப் பெண்ணிடத்தில் சேதிசொல் நிலவே!

—செ. குணரத்தினம்—

சித்திரை நிலவே அந்த
சிங்கார வதனக்காரி
சித்திரைப் பெண்ணைக் கொஞ்சம்
சந்திக்க வேண்டுமடி;
புத்தாண்டு பிறந்ததோடு
புறப்பட்டு வருவாளந்த
சித்திரைப் பெண்ணைக் கண்டு
சில சேதி சொல்லிவாராய்!

ஆயிரம் விழாவெடுத்து
அலுக்காத தமிழர் நாங்கள்
நாயிலும் கேடாயிங்கே
நலிவுற விழாவெதற்கு?
தாயிலும் மேலாம் எங்கள்
தமிழுக்கோர் இடத்தைப்பெற்ற
நாளொன்றே எங்களுக்கு
நல்லநாள், வருஷநாளாம்!

சித்திரை வருஷம் போல
சிறப்பான விழா எமக்கு
எத்துணை வந்த போதும்
எழிலாக விழாவெடுக்க
முத்தமிழானரெம்மால்
முடியுமாம் நிலவே, ஆனால்
முத்தமிழன்னை இங்கே
முடிசூட்டுப்படுதல் வேண்டும்

அதுவரை இங்கே வாழும்
'அசல்' தமிழ் மக்களுக்கு
எதற்கடி புதுவருஷம்!
ஏதடி உண்மையின்பம்?
கதறியே கண்ணீர் சிந்தும்
கதியற்ற எங்களுக்கு
உதவாத வருஷம்' என்று
ஓடி நீ சொல்லிவாராய்!

## பெயர்சூட்டுவதிலும் தமிழகம் புறக்கணிக்கப்படுகிறதே!

### கலைஞர் கருணாநிதி ஆட்சேபம்!

'ஜெட் விமானங்களுக்கு பெயர் சூட்டுவதிலேகூட மத்திய அரசு தமிழ் நாட்டைப் புறக்கணித்துவருகிறது. தமிழ் நாட்டில் புகழ்மிக்க அரசர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். கரிகாலன், குலோத்துங்கன், நெடுஞ்செழியன் போன்ற தமிழ் அரசர்களின் பெயர்களையும்மேற்படி விமானங்களுக்கு ஏன் வைக்கக்கூடாது?'

—இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி டெல்லி மத்திய அரசிடம் கேட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## வன்முறையை நிராகரிப்போம்!

இலங்கை,முன் எப்பொழுதுமே கண்டிராத பயங்கரமான நெருக்கடிக்குள் இப்போது சிக்கிக்கொண்டிருக்கிறது:

நமது நாட்டின் ஆயுதப் படைகள் 'பயங்கரவாதிகள்' என்று அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஒரு சக்தியுடன்—கடும்போர் நடத்திக்கொண்டிருக்கின்றன:

நாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் பயங்கர வன்முறைகளால் இந்நாட்டு மக்களின் அன்றாட வாழ்வு கடந்த பத்து நாட்களாகச் சீர் குலைந்து கிடக்கிறது:

அரசாங்கச் செய்திகளின்படியே நூற்றுக்கணக்கான உயிர்கள் இது வரை பலியாகிவிட்டன. இந்த வன்முறைப் போரில் இறந்து பட்டவர்களின் தாய்தந்தையர், சகோதரர்கள், மனைவி மக்கள், மற்றும் உறவினர்கள் கண்ணீரும் கம்பலையுமாக எப்படியெல்லாம் கதறித்துடிப்பர் என்பதை எண்ணும்போது நம் இதயமெல்லாம் அழுகின்றன.

எந்த ஒரு இலட்சியத்தை—அது எவ்வளவு புனிதமானதாக—அந்தரங்கசுத்தியானதாக— இருந்தாலும், அதை யடைவதற்குரிய வழி வன்முறையல்ல — அகிம்சையே என்பதில் நமக்கு உறுதியான நம்பிக்கையிருக்கிறது.

**வன்முறை எப்பொழுதும் அழிவுக்கே வழிவகுக்கும். அகிம்சை நல்வாழ்வுக்கு வழிவகுக்கும். வன்முறை அரசாங்கத்தரப்பிலிருந்து வந்தாலும், அரசாங்கத்தை எதிர்ப்போரிடமிருந்து வந்தாலும், நாம் அதை கடுமையாக கண்டிக்கிறோம்.**

அரசாங்க செய்திகளின்படி, தமிழ்பேசும் பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வன்முறைகள் பெருமளவில் தலைதூக்கியதாக தெரியவில்லை. வன்முறைகளில் ஈடுபடுவது தமிழர்களின் பண்புமல்ல—

வன்முறைச் சக்திகள் தமிழ் பிரதேசங்களில் தலைதூக்க முடியவில்லையென்றால் அதற்குக்காரணம் தமிழ்பேசும்மக்கள் அஹிம்சைக் கொள்கையில் கொண்டுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கைதான்.

அஹிம்சை வழியையே தனது அடிப்படைக் கொள்கையாகக் கொண்ட தமிழரசுக்கட்சியின் தலைமையிலே—தந்தை செல்வாவின் பாதையிலே தமிழ் பேசும் மக்கள் கட்டுப்பாடாக செல்வதனால் தமிழ் பிரதேசங்களில் வன்முறைச்சக்திகள் தலையெடுக்க முடியவில்லை:

இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு அரசாங்கத்தின் போக்கில் ஆயிரம் அதிருப்திகள் உண்டு: கொள்கை வேறுபாடுகள் உண்டு: ஆயினும் வன்முறையை அவர்கள் துளியும் ஏற்கப்போவதில்லை.

தங்கள் உரிமைகளுக்காக—இனவிடுதலைக்காக அஹிம்சை வழியிலேயே போராடுவது என்று தமிழ் பேசும் மக்கள் உறுதியாக இருக்கிறார்கள். எனவே வன்முறையை—பலாத்காரத்தை நாம் இஞ்சிற்றும் ஒப்புக்கொள்ள முடியாது.

'வாளெடுத்தவன் வாளால் மடிவான்' என்ற ஏசுநாதரின் சத்தியவாக்கையே வன்முறையில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## மொஹிதீன் நீக்கப்பட்டார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்கள் தர்மகிறி ஜயக்கொடி, வண: நாத்தாண்டிப் பஞ்ஞாகர, டாக்டர் கே. அழகியவண்ண ஆகியோரும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஜனப் எச்: எம். பி. மொஹிதீன் தமிழ்நாட்டிலிருந்து பத்திரிகைகள், புத்தகங்கள் இலங்கைக்கு இறக்குமதியாவதை தடைசெய்து ஈழ-தமிழக உறவுக்கும் இலக்கிய தொடர்புகளுக்கும் வேட்டுவைக்க முயன்றவர் என்பது தெரிந்ததே.

# 'திருமலை கடற்படைத்தளத்தை வெள்ளையரிடமிருந்து மீட்டதை தமிழரசார் எதிர்த்ததில்லை!'

## மாற்றாரின் பொய் பிரசாரத்துக்கு கதிரவேற்பிள்ளை ஆப்பு!

இன்னொரு சிறிய பிரச்சினை இருக்கிறது. அதற்கும் நான் பதில் சொல்லத்தான் வேண்டும். திருகோணமலைக் கடற்படைத் தளம் பற்றி ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அந்தத் தளத்தை பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து இலங்கை அரசாங்கம் ஏற்பதை நாம் ஏன் தடுத்தோம் என்ற கருத்துப்படக் கேட்கப்பட்டது. அப்படி இல்லை: அந்தக் கருத்தை நன்றாக விளங்கிக்கொள்ள ஹன்சார்ட்டை வாசித்தால் விளங்கும். 1956-57 ஆவது ஆண்டுக்குரிய ஹன்சாட்—24 ஆவது தொகுதி—பத்தி 463; இங்கேயிருப்பதை வாசித்தால் விளங்கும் எங்களுடைய நிலை:

"And regret also that, in the Context of the political and economic conditions now obtaining in Ceylon, the Defence Agreement entered into with the United kingdom of Great Britain and Northern Ireland, prior, and as a condition precedent, to the establishment of the Ceylon independent Act, 1947, by the Parliament of the United Kingdom, shall not be revised, altered or abrogated in so far as the bases at Trincomalee and at any other place located in the Tamil-speaking areas are concerned without the consent and concurrence of the representativ. s in this Parliament from the Tamil-speaking areas of Ceylon"

அந்தக் கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம்: அந்தக் கருத்துக்குச் சார்பாக வாக்களித்தவர்களுடைய பெயர்களை நான் சொல்லப்போகிறேன். அதாவது, தமிழ்பேசும் பிரதிநிதிகள் இருக்கும் இடத்தில்—அவர்களுடைய பிரதேசத்தில் இருக்கும் கடற்படைத்தளம் பற்றிய எந்த ஒழுங்கும் அவர்களுடைய சம்மதத்துடன் செய்யப்பட வேண்டும் என்ற பிரேரணையை திருவாளர் சுந்தரலிங்கம் பிரேரிக்க அதற்குச் சார்பாகப் பாராளுமன்றத்திலே யார் யார் வாக்களித்தார்களென்றால், திருவாளர்கள் வீ. ஏ. அழககோன், ஏ. அமிர்தலிங்கம், எஸ். ஜே. வீ. செல்வநாயம், எஸ். யூ. எதிர்மானசிங்கம்—இவர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவரல்ல, வீ. ஏ. கந்தையா, கேற்முதலியார் எம். எஸ். காரியப்பர்—அவரும் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டார், எம்.எம். முஸ்தாபர்—அவரும் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டார், வி. என். நவரத்தினம், ஜீ. ஜீ. பொன்னம்பலம்— அவரும் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டார், சீ. இராஜதுரை, என் இராஜவரோதயம், திரு: சீ. சுந்தரலிங்கம், சீ. வன்னியசிங்கம்.

இந்தக் கருத்து, வெள்ளையர் போகவேண்டும், அல்லது போகவேண்டாம் என்ற கருத்தல்ல. அவர்களுடைய நிலையைப் பற்றி நாம் கருதவில்லை. இது தமிழ்பேசும் பிரதேசத்திலிருக்கும் பிரச்சினை. அந்தப் பிரதிநிதிகளுடன் ஆலோசித்துத்தான் இதனைச் செய்யவேண்டும் என்ற கருத்தை நான் மேற்குறிப்பிட்ட அத்தனைபேரும் ஏற்றுக்கொண்டார்கள். தமி[illegible] இப்பிரச்சினையைப் பற்றி அவ்வளவு பெரிதாக நாம் ஏன் கருதவேண்டுமென்று எனக்கு விளங்கவில்லை: எங்களுடைய இன்றைய அரசியலமைப்பு அமைச்சர் அவர்கள் இதுபற்றி என்ன சொன்னார் என்பதையும் கூறவேண்டும்:

"Times of Ceylon" of 9th july 1956. It is a statement to the press by Dr. Colvin R. de Silva on the Bases Pact.

"The agreement is a victory for Britain's Tory Government: Mr. Bandaranaike has sold out on the hopes and aspirations of the popular masses of Ceylon.

Such changes as the agreement makes in the position regarding our War Bases is basically irrelevant and financially and legally more burdensome.

There is a change only in the management of the Bases and not in their use and purpose. since Britain is to have the right to use the Base; for her purposes and Ceylon is a weak little county in relation to imperial Britain. The position really is that Ceylon is to manage and administer her Bases for the use and purposes of Britain. Even it the British pay for their use, as no doubt they will, the position well be more burdensome to us financially.

what is worse, Britain now acquires by express written agreement a legal right to use these Bases where till now she had only an uncertain and insecure claim.

As for Britain's undertaking to assist Ceylon in the development and training of her Armed Forces, the old familiar phrase means only that the Armed Forces of our little country will be developed as an integral part of the Armed Forces of Imperial Britain. we remain tied to Britain's War Chariot.

The Demand for the return of our Bases is not a mere demand for Ceylonese management of a foreign enterprise. Ceylon wants to take over the enterprise itself for her own purposes, and since this is a military enterprise in which neutralist Ceylon has no real Interest, she wishes to be in a position, if she chooses, even to Dismantle these Bases.

Ceylon's aim is to avoid involvement in war. She has not the resources to achieve neutrality through military strength. The only road left to her is to generate moral strength which comes from complete disarmament on the basis of friendship with her immediate neighbours and with every country that can possibly have an interest in the Indian Ocean.

Mr. Bandaranake is, in fact, cantinuing the late D.S. Senanayake's policy of an alliance with Britain, only he refuses to admit it. why faeilitate only for Britain? If you must have Bases and must grant facilities to foreign powers, then why not grant facilities to every power with which we are friends? That is the only alternative road of true naturality; but we doubt that the British Government would in that event agree as she has agreed to assist Ccylon in the development and training of Ceylon's Armed Forces."

This is what Mr. S. J. V. Chelvanayakam said on same subject:

"On the material available to us, it appears that substantially the status quo is being maintained. what was formerly an understanding or a convention has now been reduced to an agreement. I refrain from making any further comment."

தமிழரசுக் கட்சியினர் வெள்ளையர்கள் இங்கு இருக்கவேண்டுமென்று சொன்னார்கள், அவர்கள் இந்நாட்டுக்கு மாறாக இருந்தார்கள் என்ற பிழையான கருத்தைக் சிலர் பரப்புகின்றார்கள். இது ஒரு பெரிய பிரச்சினையாக அன்று இருக்கவில்லை: இன்றைய அரசியலமைப்பு அமைச்சர் அவர்கள் கூட இந்த ஒப்பந்தத்தைப் பற்றி என்ன சொல்லி இருக்கிறார் என்பதை நான் வாசித்துக் காட்டினேன். இதனை பெரிய பிரச்சினையாக்க வேண்டும்?

(அ.நி:சபையில் 27.3.71ல் பேசிய பேச்சு)

## தமிழரசுக்கட்சி மாதகல்கிளை

இலங்கைத்தமிழரசுக் கட்சி, மாதகல் கிளையின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு ம. வல்லசார், உப-தலைவர் திரு: சீ: பீற்றர், ஜே. பி. செயலாளர் திரு. ச. ப. யோசெவ்,ஜே.பி. உப-செயலாளர் திரு. கதிர் செல்வநாயகம், பொருளாளர் திரு: தா. கந்தையா: பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்:

திருவாளர்கள்: அ. மத்தியாஸ், ச. ஜெயதாஸ், இ: சின்னராசா, ஐயன் ஆறுமுகம், எஸ். தர்மலிங்கம், வி: பரமலிங்கம்.

## தந்தைவிடு தூது

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வாள்விழியென் மங்கையிடம் மருங்கிளியே கூறுதியால்

கவிதையைப் பாடிமுடித்த சரவணனின் கண்கள் கலங்குகின்றன. சிவகாமியை நினைத்து அவன் இதயங் குமுறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு சமஷ்டி அமைப்பே ஏற்றது; இதை டாக்டர் கொல்வினே கூறியிருக்கிருர்!


## அ. நி. சபையில் தங்கத்துரை முழக்கம்!

மாண்புமிகு தலைவர் அவர்களே, இலங்கைக்கு ஒற்றை ஆட்சிமுறையே வேண்டுமென்று இங்குகொண்டு வரப்பட்டுள்ள அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானத்தை இலங்கைத்தமிழ் அரசுக் கட்சி ஏற்கமுடியாத நிலையில் இருக்கின்றது. பல இனத்தவர்கள், பல சமூகத்தவர்கள், பல சமயத்தவர்கள் வாழும் நாட்டிற்கு ஒற்றையாட்சி முறை ஒவ்வாது. அது பொருந்தாது என்று நாங்கள் கூறும்போது அதை நீங்கள் விளங்கிக் கொள்ள மறுப்பது எங்களுக்குப் புதிய விடயமல்ல.

இங்கே, இந்த அவையிலே இருக்கின்றவர்கள் இந்த நாட்டிற்கு ஒற்றை ஆட்சி தான் முறையானது. சமஷ்டி ஆட்சிமுறை ஒவ்வாதது. உதவாதது என்று கருதக் கூடிய அளவில் அறிவிற் குறைந்தவர்கள் என்று நான் கருதவில்லை. இந்த அவையில் வீற்றிருக்கும் பல சோஷலிசவாதிகள் எத்தனையோ வருடங்களுக்கு முன் இந்த நாட்டிற்குச் சமஷ்டி முறைதான் சிறந்தது, உகந்தது; அதைவிட எல்லாச் சமூகத்தினரும் ஒன்றாக இணைந்து வாழக்கூடிய வழி வேறு இல்லை என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிருர்கள்.

அரசியல் அமைப்பு அலுவல்கள் அமைச்சர் அவர்கள் 1957ஆம் ஆண்டிலே ரஷ்யாவிற்கு சென்று திரும்பி வந்ததும் விடுத்த அறிக்கையை நாம் எடுத்துக்கொண்டால் இந்த நாட்டிற்கு சமஷ்டியைத் தவிர வேறு எந்த அரசியல் முறையும் உதவாது என்று அதிற் கூறியதை அவர் மறுக்க முடியாது. இப்படியான கருத்துக்களைத் தெரிவித்தவர்கள் இன்று அரசியல் காரணமாக தங்கள் நிலையை மாற்றிக்கொண்டு நாங்கள் கூறும் காரணங்களை ஏற்கமறுக்கின்ருர்கள். கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா அவர்கள் 1957 ஆம் ஆண்டில் ரஷ்யா சென்று திரும்பியதும் விடுத்த அறிக்கை சிந்தனைக்குரியது.

இந்த நாட்டிலே மட்டும் ஒரு புதிய அரசியலமைப்பை நாங்கள் கேட்கவில்லை. பல



அரசாங்கங்கள் உலகிற் சமஷ்டி அரசியலமைப்பைத் தான் கையாண்டிருக்கின்றன. எந்த நாட்டிலே பற் பல இனங்கள், பற்பல இனத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிருர்களோ அந்த நாட்டிற்கெல்லாம் சமஷ்டி அரசியல் முறைதான் உகந்தது என்று அறிந்து அந்த நாட்டிலே சமஷ்டிக் கொள்கையை ஆதரித்து அரசாங்கம் அமைத்து இருக்கிருர்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. நாங்கள் சமஷ்டியைக் கேட்கும்போது இந்த நாட்டைப் பிளவுபடுத்துங்கள் என்று கேட்கவில்லை.

நாங்கள் இந்த நாட்டை ஒன்றல்ல, இரண்டல்ல பல துண்டுகளாகப் பிரிக்க எத்தனிக்கிறேம் என்று எங்கள் மீது குற்றஞ் சாட்டுகிருர்கள் இந்த அவையில் படித்தவர்கள் என்று கூறுபவர்கள். உண்மையாக அவர்கள் தம் நெஞ்சைத் தொட்டுக் கூறட்டும்; சமஷ்டி என்ருல் நாட்டைப் பிரிப்பதுதானு? பல இனங்கள் வாழ்கிற நாட்டிலே வேறு என்ன சிறந்த முறை இருக்கிறது என்பதை உங்களால் எங்களுக்கு எடுத்துக் கூற முடியுமா? ஐக்கிய அமெரிக்காவிலே சமஷ்டி ஆட்சி இருக்கிறது என்று கூறினர். அங்கேயிருக்கிற இனப்பிரச்சினைகளை இந்தச் சமஷ்டி ஆட்சி தீர்த்து விட்டதா என்று கேட்கிருர்கள் சமதர்மம், சோசலிசம் பேசும் நண்பர்கள்.

ஐக்கிய அமெரிக்கா ஆக்கப்பட்டபொழுது இன அடிப்படையிலே எந்த இனம் ஒவ்வொரு பகுதியில் வாழ்கிறது என்ற எண்ணத்தைக் கொண்டு சமஷ்டி ஆட்சி ஏற்படுத்தப்படவில்லை என்பதை நீங்கள் கவனிக்கவேண்டும் அமெரிக்காவிலே சமஷ்டி ஆட்சி ஏற்பட்டபொழுது அங்கே வாழ்கிற சிறுபான்மையினருக்காக தனி ராஜ்யம் ஏற்படுத்தப்படவில்லை. அதனுல்தான் அங்கே இனப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதையும் நீங்கள் உணர வேண்டும். நாங்கள் இங்கே இன அடிப்படையிலே எந்தெந்தப் பகுதியிலே எந்த இனம் அதிகமாக வாழ்கிறதோ அந்த இனத்தினருக்கு ஒரு ஆட்சி வேண்டும்; அதன் மூலம் நாங்கள் இணைந்து வாழ்வோம் என்றுதான் கூறுகிறேம்.

---

அத்தியாயம் (12)

# தத்தை விடு தூது

மூன்று நாட்கள் இடைவிடாது பெய்த மழை ஒருபடி ஓய்ந்தபின் எங்கும் கதிரவனின் ஒளிக்கதிருக்காக ஏங்கி நின்றமக்கள் கூட்டம் அதில் இன்பங்காணத் துடித்து வெளிவந்தபோது சரவணனும் மெதுவாகத் தெருவாயிலை நோக்கி நடக்கிருன். சூரியனின் செங்கதிர்கள் அவன் மேனியிற் பட்டுத் தெறித்தபோது அவனது உடலுக்கும் உள்ளத்துக்கும் அது இதமாக இருந்தது. அந்த மகிழ்ச்சியில் அவன் தன் மேனியை ஒருமுறை சிலுப்பிப் கொள்கிருன். அந்த மெல்லிய காலை வெயில் இடைவிடாது பெய்த மழைக்குளிரால், விறைந்திருந்த உடலுக்கு ஒத்தடம் போடுவது போன்று அமைந்திருந்தது.

அவன் வாயிலில் நின்ற போது அவனது தூரத்து உறவினர் வேலுப்பிள்ளை அவன் வாயிலைக் கடந்து சென்ருர். அவன் நிற்பதைப் பார்த்துவிட்டு ஏதாவது பேசிவைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் "என்ன தம்பி எப்படி மழையென்று வினவினுர். சரவணன் பதிலுக்குச் சிரித்து வைத்தான். தம்பிக்கு இப்ப பேசக்கூட இயக்கமில்லை. வீணு மனதைப்போட்டு அலட்டிக் கொள்ளாதே நேற்று வரை சிவகாமியோடகைகோர்த்து விளையாடித்திரிந்த உனக்கு இது பெரியதண்டனைதான் ராசா...எண்டாலும் என்ன செய்யறது. மனதைத் தேற்றிக்கொள். வேலுப்பிள்ளை தன்பாட்டுக்கே பேசிக் கொண்டுபோனுர். இடையில் ஏதாவது பேசித் தடுக்காவிட்டால் மனுசனிடம் இருந்து தப்பமுடியாதென்பதை உணர்ந்துகொண்ட சரவணன்" அது சரி அண்ணே... நீங்கள் எங்க வெள்ளனயோட இந்தப் பக்கம் என்று கேட்டுவைத்தான்.

"யாரைத்தம்பி என்னையே கேட்கிருய்...? என்ர மகளுக்கு ஒரு பொடியன் பிறந்தது தெரியுமல்லே? அந்தக் குழந்தைக்குத் தாய்ப்பால் போதவில்லைத்தம்பி. பரியாரியார் பசும்பால் கொடுக்கட்டாம் பசுப்பால் என்டால் கண்டவரிடத்தும் வாங்கிக் கொடுக்கலாமே தம்பி...? அதுதான் எங்கேயோ அண்மையில் கன்றைஈன்ற பசுவொன்று விலைக்கிருக்காம் ஒரு நேரத்துக்கு ஒன்றறைப்போத்தல் கறக்குமாம். பின்னத்தான் பொன்னையா அண்ணை அழைத்துச் சென்று காட்டிப் பார்க்கலாம் என்று வந்தனுன். எனக்குப் பசுவைப்பற்றி அவ்வளவு தெரியாது. காசைக் கொடுத்து வாங்கிற பொருளல்லே... கண்ணை மூடிக் கொண்டு உன்ர மாமா மருமகனை வாங்கியது போல வாங்கலாமே...? அதுதான் இன்றைக்கு மழை வெளிச்சிருக்கெண்டு வெள்ளனயோடவந்தனுன். எனக்கும் நேரமாகுது. அப்ப வரட்டே தம்பி...?

கூறி விட்டுச் செல்லும் வேலுப்பிள்ளையையே பார்த்துக் கொண்டிருக்கிருன் சரவணன். அவர் கூறியதும் நியாயமாகவே பட்டது அவனுக்கு. ஆயினும் அவர் பேசிய விதம் அவனுக்குப் பிடிக்கவில்லை. சிவகாமியின் பெறுமதியை விடப் பசுவின் பெறுமதி உயர்ந்து விட்டது போற் தோற்றுகிறது அவனுக்கு. சிவகாமிடம் அவனுக்கு ஒரு ஆழ்ந்த அனுதாபம் தோற்றுகிறது. கடந்த பிறப்பில் அவள் என்ன கொடுமை செய்தாளோ என்று மனம் உருகுகிருன்.

முத்துக்குமரனைப்பற்றிப் பலரும் பலவிதமாகப் பேசியதில்இருந்து அவருடன் சிவகாமி சந்தோஷமாக வாழ முடியாது என்ற முடிவுக்குஅவன் எப்போதோவந்துவிட்டான் வீட்டுக்குத் தேவையான ஒரு பசுவை வாங்குவதற்கே மனிதர்கள் பிறரது உதவியை நாடுகின்ருர்களென்ருல் ஒரு பெண்ணுக்குத் தேவையான கணவனைத் தேர்ந்தெடுக்கும் போது நாலுபேரைக் கலந்தாலோசிக்க வேண்டாமா? சிவகாமியின் திருமணம் அவனுக்குப் பெரும்புதிராகவேயிருந்தது; சின்னக் குழந்தைகள் வீடுகளில் செய்து விளையாடும் பொம்மைக்கலியாணம் போன்றதுதான் அது என நினைக்கிருன். குழந்தைகளும் அப்படித்தான் திடீர் என ஒரு எண்ணம் பிறந்தால் பொம்மைக் கல்யாணம் வைத்துவிடுவார்கள். சிவகாமிக்கும் அப்படித்தான் ஒன்று நடக்கப் போகிறது. ஆகையால் அவளும் பொம்மையாகி விட்டாளா...? அல்லது பொம்மை ஆக்கப்பட்டு விட்டாளா? என்ற கேள்வியில் எழுகிறது ஒரு கவி.

**திருமதி. பாலேஸ்வரி**
**நல்லரெட்டினசிங்கம்**

தம்மனைக்கோரி
பசு வேண்டிற்
ருெம்பலகாற் பார்த்திருந்தும்
பின்னுந் துணிவிலராய்ப்
பேதுறுதன் மாந்தர் குணம்
[illegible]
விமைய
பொழுதி லெழுமுடிப்பார்
சின்னப் பதுமைகொடு
சிறுர் செய்மணம்
போலுமரோ
தெரிவையவட் கிம்மாற்றஞ்
சீர்க்கிளியே கூறுதியால்.

சிவகாமிமேல் ஒருபுறம் ஆத்திரம் இருந்தாலும் மறுபுறம் அவனுக்கு அனுதாபம் பிறக்கிறது: சிவகாமி தனக்குக் கிடைக்கவில்லையே என்ற துன்பத்தைவிட சிவகாமிக்குக் கிடைக்கப் போகும் கணவன் அவளுக்கு ஏற்றவனில்லையே என்பது தான் அவன் கவலை. முத்துக்குமரனுக்கும் அவளுக்கும் உள்ள வயது வித்தியாசத்தை நினைத்துப் பார்க்கிருன். ஒன்று இரண்டு வயதல்ல பதினுறு பதினேழு வயதுக்கு மூத்தவஞன ஒருவனைச் சிவகாமி மணந்துகொள்ளப் போகிருள் என்பதே புற்று நோய் போல அவனை வாட்டுகிறது. ஆண் என்னும் உருவத்தில் ஒரு அரசாங்க உத்தியோகமும் வகித்துக்கொண்டால் அதை இந்தப் பெண்கள் ஒரு தராதரமாகக் கருதிக்கொள்கிருர்களோ தெரியாது. முத்துக்குமரனுக்கும் அந்த இரண்டு தராதரத்தையும்விட வேறு எந்தத் தராதரமும் கிடையாது சிவகாமியைக் கைப்பற்ற.

சிவகாமியையும் முத்துக்குமரனையும் சரவணன் மனதில் ஒப்பிட்டுப்பார்க்கிருன். அப்போது அவர்களது சிறுபராயத்தில் நடந்த சம்பவம் ஒன்று அவனுக்கு ஞாபகம் வருகிறது. சரவணனும் கனகசுந்தரமும் பாடசாலையில் சிறுர்களாகப் படித்துக் கொண்டிருந்த காலம் அது: அப்போது பாடசாலை நாடகத்தில் அவர்கள் இருவரும் முக்கிய பங்கெடுத்து நடிக்க வேண்டி ஏற்பட்டது. சரவணன் தசரதனுகவும் கனகசுந்தரன் கைகேயியாகவும் நடித்தனர். கனகசுந்தரம் சரவணனைவிடச் சிறிது குட்டையாகவும் பெண்மைத் தன்மை உள்ளவனுகவும் இருந்ததால் அவன் பெண் பாகமேற்கவேண்டி ஏற்பட்டது. அவர்களது நடிப்பைப் புகழாதவர்களே இல்லையெனலாம்.

உலகத்தில் உள்ள அத்தனை பேர் புகழ்ந்தாலும் சிவகாமியின் வாயிலிருந்து வரும் ஒரு புகழுரைக்கீடாகுமா அவையெல்லாம். ஆகவே சரவணன் தன் நாடக பாத்திர வேடத்தைக் களையாமலே தன் தாயாருக்குக் காட்டும் சாட்டுடன் வீட்டுக்குச் சென்ருன். அங்கே சிவகாமியும் அவனது வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள். தம்பி முத்துப்பிள்ளையும் அவரது பாரியாரும் தங்களது புத்திரச் செல்வங்களுக்கு எங்கே திருஷ்டிபட்டுவிட்டுவிடுமோ எனப் பயந்து திருஷ்டிகழித்தனர். சிவகாமி மட்டும் மௌனமாக இருந்தாள். அதனுல் சரவணனே அவளிடஞ்சென்று எப்படி என் வேடம் என்று வினவியதற்கு. 'ஐயே... இந்தக் கிழட்டு வேடத்தில் உங்களைப் பார்க்க எனக்குப் பிடிக்கவேயில்லை என்று கூறியது அவன் இதயத்தில் ஒலிக்கிறது.

கிழட்டு வேடத்தையே விரும்பாத அவள் இப்போது ஒரு கிழவனுக்கே மாலைசூட வேண்டி ஏற்பட்டது யாருடைய துரதிர்ஷ்டமோ என நினைத்துப் பாடுகிஞன் ஒரு கவிதை.

ஆணைப் பிறந்த
லவசியம் வேருேர்குணமும்
பேணுர்த மின்னுயிராம்
பெண்ணைக் கொடுத்திடுவார்
நாணுர் மதியார்
நகைத்தே களித்திடுவார்
வாணுள் பசுங்கிளியே
மடலாக் கழித்திவரே

(3-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது

## 5வது ஜனத்திரள் நிறைந்த வாரமாக காட்சிதருகின்றன்

செட்ன்ரல்
(மருதானை)
ராணி ஜோதி
(யாழ்நகர்) (திருமலை)
—ஆகிய திரைகளில்—
நடிகர்திலகம்
* சிவாஜிகணேசன்
* கே. ஆர். விஜயா
* முத்துராமன்

சிவாஜிகணேசன்
அளிக்கும்
அருண்பிரசாத் மூவீஸ்



சதன்
நம்பியார்
எஸ்: என். லட்சுமி
விஜயசந்திரிகா
பேபிராணி
மற்றும் பலர் நடித்த


# ராமன் எத்தனை ராமனடி

கதை—வசனம்: பாலமுருகன்
டைரக்ஷன்—தயாரிப்பு: பி. மாதவன் (பி: ஏ.)
இசை மெல்லிசை மன்னர்: எம். எஸ். விஸ்வநாதன்
(பாஸ்கள் யாவும் ரத்து)

---

இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய வா ராஜா வா

3வது வாரமாக
செல்லமகால்
வின்சர் இம்பீரியல்
(யாழ்நகர்) (மட்டுநகர்)
—ஆகிய திரைகளில்—
காட்சிதருகிறன்
வா ராஜா வா
மாஸ்டர் பிரபாகர்
—திறம்பட நடித்த—



தமிழனின் கலைத்திறன் ஓங்கவைத்த மாமல்ல புரத்தில் படமாக்கிய


வா ராஜா வா

ஒவ்வொரு பள்ளிக்கூட மாணவர்களும் பெற்றேர் ஆசிரியர் பார்க்கவேண்டிய படம்

# வா ராஜா வா

(வண்ணப் படம்) திரைக்கதை—வசனம்—டைரக்ஷன் ஏ. பி. நாகராஜன்.

---




டைரக்ஷன்:—ராமண்ணா

வருகிறது
கெப்பிட்டல்
பிளாஸா
ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
அசோகன் முத்துராமன்
நாகேஷ் ஷீலா
நடித்த
ராமண்ணாவின்

# மூன்றெழுத்து

கெப்பிட்டல்
95-வது
நாள்
நடிகர்திலகம்
சிவாஜி
கணேசன்
காஞ்சனு
எம். என்.
நம்பியார்
நடித்த



# சிவந்த மண்

கிங்ஸ்லி
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
நடித்த
படகோட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1971-ம் வருடம் சித்திரை மாதம் 17-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —அசிரியர்: கோவைமகேசன்